# 41

# சோதனைக்கான காலம்

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #16*

V. *இரண்டாம் பஸ்காவில் இருந்து மூன்றாம் பஸ்கா வரை (தொடர்ச்சி).*
   X. *ஏரோதுவின் ஆளுகைப் பகுதியில் இருந்து இயேசு விலகிச் செல்லுதல் (மற்றும் திரும்பி வருதல்) (தொடர்ச்சி).*
      2. *ஐயாயிரம் ஆண்களுக்கு உணவளித்தல் (மத். 14:13-21; மாற். 6:33-44; லூக். 9:11-17; யோவா. 6:2-14).*
      3. *தண்ணீரின்மீது நடத்தல் (மத். 14:22-36; மாற். 6:45-56; யோவா. 6:15-21அ).*
   Y. *ஜீவ அப்பம் பற்றி இயேசுவின் உரை (மற்றும் பேதுருவின் அறிக்கை) (யோவா. 6:21ஆ-71).*

### அறிமுகம்

*இந்தப் பாடம், ஐயாயிரம் பேர்களுக்கு உணவளித்தல் என்ற இயேசுவின் குறிப்பிடத்தக்க அற்புதங்களில் ஒன்றுடன் தொடங்குகிறது. இது ஜீவ அப்பம் பற்றிய பிரசங்கம் என்ற அவரது மிகவும் முக்கியமான உரைகளில் ஒன்றுடன் முடிவடைகிறது. முதலாவது, அவரது பூமிக்குரிய ஊழியத்தில் உயர்வான வேளைகளில் ஒன்றாக இருந்தது; இரண்டாவது மிகவும் தாழ்வான தருணங்களில் ஒன்றாக இருந்தது.*

*இந்தப் பாடத்தில் நாம், இரண்டு வார்த்தைகளின்மீது கவனம் செலுத்துவோம். முதலாவது, "சோதனை" என்ற வார்த்தையாக உள்ளது. திரளான கூட்டத்திற்கு இயேசு உணவளிப்பதற்கு முன்பு, அவர் பிலிப்பு விடம் "இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம்?" என்று கேட்டார் (யோவா. 6:5ஆ). இதைக் கர்த்தர், "அவனை[பிலிப்புவை]ச் சோதிக்கும்படி" கேட்டார் என்று யோவான் எழுதினார் (யோவா. 6:6). இதைத் தொடர்ந்து, கிறிஸ்து தம் அப்போஸ்தலர்களுடன் மேற்கொண்ட உரையாடல், பன்னிருவரில் [பிலிப்புவுடன் கூட] மற்ற யாவரையும்கூட சோதித்தது.*

*இரண்டாவது வார்த்தை "நம்பிக்கை" அல்லது "விசுவாசம்" என்பதாகும். ஜீவ அப்பம் பற்றிய பிரசங்கத்தில், "நம்பிக்கை" என்ற வார்த்தையின் பல்வேறு வடிவங்கள் மீண்டும் மீண்டும் காணப்படுகின்றன (யோவா. 6:29, 35, 36, 40, 47). விசுவாசத்தின் அவசியத்தை இயேசு அதிகமதிகமாக வலியுறுத்தத் தொடங்கினார் என்று நாம் ஏற்கனவே கவனித்தோம்.[1]*

*கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் அவரில் உண்மையிலேயே விசுவாசம்*

*கொண்டுள்ளார்களா இல்லையா என்பதை நிரூபிப்பதற்கான வேளை கிறிஸ்துவுக்கு வந்திருந்தது. ''சோதித்தல்'' மற்றும் ''விசுவாசம்'' என்ற வார்த்தைகள் இப்பாடத்தில் உள்ள நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிலும் காணப்படுவதில்லை - ஆனால் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், கர்த்தரைப் பின்பற்றுவதாக உரிமைகோருபவர்களின் விசுவாசத்திற்கான சோதனை யொன்று ஆழப்பதியப்பட்டுள்ளது.*

## சமனான புல்தரையில் ஒரு சோதனை (மத். 14:13-21; மாற். 6:33-44; லூக். 9:11-17; யோவா. 6:2-14)

*நமது முந்திய பாடத்தின் முடிவில், இயேசு தாமும் தமது சீஷர்களும் கலிலேயாவில் கிழக்குக் கரைப் பகுதிக்குப் படகில் பயணம் செய்யும் ஒரு திட்டத்தை முன்மொழிந்திருந்தார் (மாற். 6:30-32; மத். 14:13; யோவா. 6:1ஐக் காணவும்).[2] அவர்களின் அடைவிடம், பெத்சாயிதா-ஜூலியஸ் என்ற கிராமத்திற்கு அருகாமையிலிருந்த வனாந்தரமான இடமாய் இருந்தது (லூக். 9:10).*

*அவர்கள் கரையை நெருங்குகையில், திரளான மக்கள் கூட்டம் - நூற்றுக்கணக்கில் மக்களும், அவர்களுடன் ஒவ்வொரு நிமிடமும் அதிகம் அதிகமான மக்கள் வந்து சேர்ந்ததுமான கூட்டம் - கரையை அணுகிற்று.[3] கிறிஸ்து கிருபை பொருந்தினவராய், ''அவர்கள்மீது பரிவிரக்கம் கொண்டார்.'' அவரது வழக்கமான பாணியில் அவர், அவர்களுக்குப் போதிக்கவும் அவர்களில் நோயுற்று இருந்தவர்களைக் குணமாக்கவும் தொடங்கினார் (மத். 14:14; மாற். 6:34; லூக். 9:11).*

### விசுவாசம் சோதிக்கப்பட்டது: "உங்கள் தேவைகளைத் தருவேன்[4] என்று என்மீது நம்பிக்கை[5] கொள்ளுகின்றீர்களா?"

*நாளானது முடிந்தபோது, கூட்டத்தார் எண்ணிக்கை ஆயிரக் கணக்கிலாகும் வரையில் அக்கூட்டம் பெருத்துக் கொண்டே சென்றது (லூக். 9:14). சோதித்தல் தொடங்கிற்று:*

> *இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து, திரளான ஜனங்கள் தம்மிடத்தில் வருகிறதைக் கண்டு, பிலிப்புவை நோக்கி: "இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம்'' என்று கேட்டார். தாம் செய்யப்போகிறதை அறிந்திருந்தும், அவனைச் சோதிக்கும்படி இப்படிக் கேட்டார் (யோவா. 6:5, 6).*

*பிலிப்பு, இயேசுவின் வார்த்தைகளை, கணக்கிடுதலுக்கான தனது திறமைக்கான சோதனை என்பதாகக் கண்டார். அவர், ''இவர்களில் ஒவ்வொருவனும் கொஞ்சங் கொஞ்சம் எடுத்துக் கொண்டாலும், இருநூறு பணத்து அப்பங்களும் இவர்களுக்குப் போதாதே" என்று பதில் அளித்தார் (யோவா. 6:7).*

பின்பு விரைவிலேயே, அப்போஸ்தலர்களில் எஞ்சியிருந்த மற்றவர்களுக்கு, விசுவாசத்திற்கான இதே அடிப்படை சோதனை தரப்பட்டது:

> சாயங்காலமானபோது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து: "இது வனாந்தரமான இடம், நேரமுமாயிற்று; ஜனங்கள் கிராமங்களுக்குப் போய்த் தங்களுக்குப் போஜனபதார்த்தங்களைக் கொள்ளும்படி அவர்களை அனுப்பிவிடவேண்டும்" என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி: "அவர்கள் போகவேண்டுவதில்லை; நீங்களே அவர்களுக்குப் போஜனங்கொடுங்கள்" என்றார் (மத். 14:15, 16).

பன்னிருவரும், கூட்டத்தாருக்கு "உண்பதற்கு ஏதாவது" தரவேண்டும் என்ற கிறிஸ்துவின் கட்டளையை, அவர்கள் தங்கள் ஆதாரமூலங்களை ஆய்வு செய்யும் திறமை என்பதாகக் கண்டார்கள். அவர்கள் தங்களிடத்தில் உணவு/சமையல் பொருட்கள் எதுவும் வைத்திருக்கவில்லை,[6] கூட்டத்தின் திரளில் கணக்கிட்டப்போது ஒரு பையனிடம் மாத்திரமே திண்பண்டம் இருந்தது (மத். 14:17).

புயலை அமர்த்துதல் மரித்தோரை எழுப்புதல் உட்பட கர்த்தர் பல அற்புதங்கள் செய்திருந்ததை மாத்திரமே சீஷர்கள் கண்டிருந்தார்கள் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். இந்த வேளையில் அவர் நோயாளிகளைக் குணமாக்குவதை அவர்கள் கண்டிருந்தார்கள். மற்றும் இயேசு சமீபத்தில்தான் அவர்கள் அற்புதம் செய்வதற்கான வல்லமையை அளித்திருந்தார் (மத். 10:1). இருந்தபோதிலும், கிறிஸ்து ஒரு அற்புதம் செய்ய முடியும் என்றால், அவரால் - ஒரு கைமட்டுமே நிறையக்கூடிய அளவுள்ள அப்பத்தையும் மீன்களையும் வைத்துக் கொண்டு ஐயாயிரம் ஆண்களும் அத்துடன் பெண்களும் பிள்ளைகளும் கொண்ட பெரிய கூட்டத்திற்கு உணவளித்தல் உள்ளிட - எந்த அற்புதத்தையும் செய்ய முடியும்[7] என்பதைப் புரிந்துகொள்வதில் அவர்கள் மிகவும் கடினமான வேளையைக் கொண்டிருந்தார்கள்.

அற்பமான உணவுப் பொருளைக் கையில் எடுத்த இயேசு, உணவு உண்பதற்காகக் கூட்டத்தினரைப் புல்வெளியில் அமரும்படி கூறினார் (மத். 14:19) - ஐந்து சிறிய அப்பங்களும் இரண்டு சிறு மீன்களும்[8] மாத்திரமே இருந்தன என்பது தெளிவு. இவ்விதமாக, சோதனையானது அங்கிருந்த ஒவ்வொருவருக்கும் விரிவாக்கப்பட்டது. சீஷர்களும் அந்தத் திரளான கூட்டத்தினரும் கிறிஸ்து கட்டளையிட்டபடி செய்வதற்காவது குறைந்தபட்சம் போதுமான அளவு விசுவாசம் கொண்டிருந்தார்கள்.

### சோதனையின் விளைவுகள்: ஒரு உணவு - மற்றும் தவறான புரிந்துகொள்ளுதல்

நாம் ஒரு தேர்வை எழுதும்போது, பொதுவாக அதன் முடிவை அறிந்து கொள்ள மிகுந்த ஆர்வம் கொண்டிருப்போம். இந்த நிகழ்ச்சியில், அங்கிருந்தவர்களின் விசுவாசத்திற்கு வெகுமதியளிக்கப்பட்டது: ஒரு பையனுக்கு மட்டுமே போதுமானதாயிருந்த திண்பண்டமானது, பசியுடனிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் திருப்தியுடன் போதுமான அளவு

*உண்பதற்குரிய* [all-you-can-eat-buffet[9]] *உணவாயிற்று:*

> *எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்; மீதியான துணிக்கை களைப் பன்னிரண்டு கூடை நிறைய எடுத்தார்கள். ஸ்திரீகளும் பிள்ளைகளும் தவிர சாப்பிட்ட புருஷர்கள் ஏறக்குறைய ஐயாயிரம் பேராயிருந்தார்கள் (மத். 14:20, 21; மேலும் மாற். 6:41-44; லூக். 9:16; யோவா. 6:12ஐயும் காணவும்).*

*உண்டவர்கள் ஆனந்தம் அடைந்தார்கள்[10] ஆனால் அவர்கள், அந்த உணவே ஒரு கூடுதலான சோதனை என்பதை உணர்ந்தறியத் தவறினார் கள்: அது, அவர்கள் எவ்வாறு இயேசுவையும் அவரது ஊழியத்தையும் உணர்ந்தறிந்தார்கள் என்பதற்கான சோதனையாக இருந்தது. அவர்கள் உணர்வெழுச்சி அடைந்தவர்களாய், "மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி[11]" என்று ஒருவருக்கொருவர் கூறிக் கொண்டார் கள் (யோவா. 6:14). இவரே அவர்கள் எதிர்பார்த்திருந்த ஒருவராக இருந்தார்![12] விரைவிலேயே, "வந்து, [அவரை] இராஜாவாக்கும்படிப் பிடித்துப் போக" திட்டங்கள் வடிவமைக்கப்பட்டன (யோவா. 6:15).*

*"இராஜாவாக்குதல்?" அவர் இராஜாவாகப் பிறந்திருந்தார் (மத். 2:2)[13] - ஆனால் அந்த மக்கள், பூமிக்குரிய இராஜா என்ற யூதத்துவத்தின் பிரபலமான கருத்தைத் தங்கள் சிந்தையில் கொண்டிருந்தார்கள்: தங்கள் விரோதிகளுக்கு எதிராகத் தங்களை வெற்றிகரமாக நடத்திச் செல்ல முடியக் கூடிய ஒருவர். இயேசுவின் தற்போதைய அற்புதம் அவர்களின் கற்பனை களைப் பற்றியெரியச் செய்திருந்தது: அவர் படைத்தளபதியாக மட்டு மின்றி, அதன் பண்டகசாலை அதிகாரியாகவும் - படைகளுக்கு அன்றாட உணவளிப்பவராகவும் செயல்பட முடியும்! அவர்கள், அவரை பூமிக்குரிய ராஜாவாக ஏற்றுக்கொள்ளுதல் என்பது அவரை தங்கள் ஆவிக்குரிய ராஜாவாக ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்தலுக்குச் சமமாயிருக்கும் என்பதை உணர்ந்தறியத் தவறிவிட்டார்கள்.*

*அவர்களின் நோக்கங்களை அறிந்த கிறிஸ்து தமது சீஷர்களை புறம்பே அனுப்பி[14] மற்றும் கூட்டத்தினரைக் கலையச் செய்ததின் மூலம் அவர்களின் திட்டங்களில் தடை ஏற்படுத்தினார்.[15] பின்பு அவர் கவலை கொண்ட வராய்,[16] தனித்திருக்கவும் ஜெபிக்கவும், அருகாமையிலிருந்த ஒரு மலையின் மீது[17] ஏறினார் (மத். 14:22, 23; மாற். 6:45, 46; யோவா. 6:15-17அ).*

## *புயல் வீசிய கடலில் ஒரு சோதனை (மத். 14:22-33; மாற். 6:45-52; யோவா. 6:15-21அ)*

*இயேசு தமது அப்போஸ்தலர்களைப் படகில் ஏறி கப்பர்நகூமுக்குச் செல்லும்படி கூறியபோது, அவர்கள் கூட்டத்தாரிடத்தில் அவர் தமது பணியை முடித்த பின்பு தங்களுடன் சேர்ந்து கொள்வார் என்று எதிர் பார்த்தார்கள் என்பது உறுதி (யோவா. 6:17ஐக் காணவும்). ஒருவேளை அவர்கள் கடற்கரையோரமாகக் காத்திருந்து இருக்கலாம்: ஒருவேளை அவர்கள் சற்று தூரம் படகை வலித்துச் சென்று காத்திருந்து இருக்கலாம்.*

*கர்த்தர் வராதபோது, முடிவில் அவர்கள் கடலைக் கடந்து செல்லத் தொடங்கினார்கள்.*

***விசுவாசம் சோதிக்கப்பட்டது: "நான் உங்களைப் பாதுகாப்பேன் என்று நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா?"***

*கடலில் ஏறக்குறைய பாதிதூரம் சென்றபோது,[18] அந்த நீர்த்திரள் உட்பட்டிருந்த திடீர்ப் புயல்களில் ஒன்றினால் தாக்கப்பட்டார்கள்.[19] "பெருங்காற்று அடித்தபடியினாலே கடல் கொந்தளித்தது" என்று யோவான் எழுதினார் (யோவா. 6:18). "... படவு ... எதிர்க்காற்றாயிருந்தபடியினால் அலைகளினால் அலைவுபட்டது" என்று மத்தேயு கூடுதலாகக் கூறினார் (மத். 14:24). காற்றானது, அவர்கள் செல்ல முயற்சி செய்துகொண்டிருந்த மேற்கு திசையில் இருந்து வீசிக் கொண்டிருந்தது (மத். 14:24; மாற். 6:48), எனவே அவர்கள் தங்கள் படகின் பாய்களைச் சுருட்டி வைத்துவிட்டு, தண்டு வலிக்கத் தொடங்கினார்கள் (மாற். 6:48). அவர்கள் மணிக்கணக்கில் தண்டுவலித்தார்கள்,[20] ஆயினும் கொந்தளிக்கும் கடலில் அவர்களால் முன்னேறிச் செல்ல முடியவில்லை. நாம் அவர்களின் சக்தி தீர்ந்த நிலையையும் பெரும் வருத்தத்தையும் கற்பனை செய்ய முடியும். மீண்டும் ஒருமுறை, அவர்களின் விசுவாசம் சோதிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.[21] இதற்கு முன்பு ஒருமுறை இயேசு புயலை அமர்த்தியதன் மூலம் அவர்களைக் காப்பாற்றியிருந்தார்,[22] ஆனால் இவ்வேளையில் அவர்களுடன் அவர் இல்லை. இவ்வேளையில் அவர் தூரத்தில் இருந்தார்.*

*கிறிஸ்து அவர்களிடமிருந்து மைல்கணக்கில் பிரிந்திருந்தாலும், அவர்களின் இக்கட்டான நிலையை அவர் அறிந்திருந்தார். மாற்கு பின்வருமாறு எழுதினார்:*

> *சாயங்காலமானபோது படவு நடுக்கடலிலிருந்தது; அவரோ கரையிலே தனிமையாயிருந்தார். அப்பொழுது காற்று அவர்களுக்கு எதிராயிருந்தபடியினால், அவர்கள் தண்டு வலிக்கிறதில் வருத்தப்படுகிறதை அவர் கண்டு, இராத்திரியில் நாலாம் ஜாமத்தில் கடலின் மேல் நடந்து அவர்களிடத்தில் வந்து, ... (மாற். 6:47, 48).*

*தண்ணீரின்மீது நடத்தல் என்பது நன்கு அறியப்பட்ட இயேசுவின் அற்புதங்களில் ஒன்றாக உள்ளது. அதை நீங்கள் உங்கள் மனதில் சித்தரிக்கும்போது, பொதுவாகச் சித்தரிக்கப்படுகிறபடி, ஒரு அமைதியும் மென்மையுமான தண்ணீர்ப் பரப்பின்மீது அவர் மிதித்து நடந்ததுபோல் கண்ணோக்காதீர்கள். மாறாக அவர், புயலினால் கொந்தளித்துக் கொண்டிருந்த கடலில் முன்னேறிச் செல்லுகையில் - முதலில் ஒரு அலைமுகட்டின் உச்சியில், பின்பு அலைகளுக்கிடையிலான பள்ளத்தில் - மேலும் கீழும் வேகமாய் அசைந்தாடுவதாகக் காணுங்கள்.*

*கிறிஸ்து படகை நெருங்குகையில், சீஷர்கள் அவரை கணப்பொழுது கண்ணோக்கினார்கள் - ஒருவேளை ஒரு மின்னல் வெளிச்சத்தில் அவர்கள் அவரைக் கண்டிருக்கலாம். எதிர்பாராத வகையிலான அவரது தோற்றம் அவர்களைப் புயலைக் காட்டிலும் அதிகமாகப் பயமுறுத்திற்று.[23] "அவர்*

*கடலின்மேல் நடக்கிறதைச் சீஷர்கள் கண்டு, கலக்கமடைந்து, ஆவேசம்[24] என்று சொல்லி, பயத்தினால் அலறினார்கள்" (மத். 14:26; மாற். 6:49, 50அ). இயேசு அவர்களின் பயத்தை அமைதிப் படுத்தி, அவர்களிடத்தில், "திடன் கொள்ளுங்கள், நான்தான், பயப்படாதிருங்கள்'' என்று கூறினார் (மத். 14:27; மாற். 6:50ஆ; யோவா. 6:20ஐக் காணவும்).*

*இதன் பின்பு நாம் மத்தேயு 14ல், பேதுரு தண்ணீரின்மீது நடந்த குறிப்பிடத்தக்க வரலாற்றை காண்கின்றோம். அவர் கிறிஸ்துவிடம், "ஆண்டவரே! நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும்" என்று கூறினார் (வ. 28). "அதற்கு அவர்: 'வா' என்றார். அப்பொழுது, பேதுரு படவை விட்டிறங்கி இயேசுவினிடத்தில் போக ஜலத்தின்மேல் நடந்தான்" (வ. 29). இந்த அப்போஸ்தலர் தமது கண்களை இயேசுவின்மீது வைத்திருந்த வரையிலும், அவர் தண்ணீரில் மிதப்பவராய் நிலைத்திருந்தார் - ஆனால் அவர் தமது பார்வையை, காற்றினால் கொந்தளித்த கடலின்மீது திருப்பியபோது, ''அவர் பயந்தார்'' மற்றும் மூழ்கத் தொடங்கினார் என்ற விளக்கவுரையை நான் அடிக்கடி கேள்விப் பட்டுள்ளேன் (வ. 30அ). அவர், "ஆண்டவரே, என்னை இரட்சியும்" என்று கதறினார் (வ. 30ஆ). "உடனே இயேசு கையை நீட்டி, அவனைப் பிடித்து: 'அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய்' என்றார்" (வ. 31). நம்மில் சிலரைப் போலவே, பேதுரு தமது நடையைத் தொடங்கப் போதுமான விசுவாசத்தைக் கொண்டிருந்தார், ஆனால் அதை முடிக்கப் போதுமான விசுவாசத்தைக் கொண்டிருக்கவில்லை.*

**சோதனையின் விளைவுகள்: அமைதி - மற்றும் குழப்பம்**

*இயேசுவும் பேதுருவும் படகினுள் ஏறிவருவதற்கு சீஷர்கள் உதவினார் கள் (யோவா. 6:21அ; மத். 14:32அ ஆகிய வசனங்களைக் காணவும்). உடனடியாக,[25] "காற்று அமர்ந்தது; அவர்கள் மிகவும் பிரமித்து ஆச்சரியப் பட்டார்கள்'' (மாற். 6:51). பின்பு, ''படவில் உள்ளவர்கள் வந்து: 'மெய்யாகவே நீர் தேவனுடைய குமாரன்' என்று சொல்லி, அவரைப் பணிந்துகொண்டார்கள்!" (மத். 14:33).*

*இது ஒரு மகிழ்ச்சியான முடிவைக் கொண்ட ஒரு கதை போன்று காணப்படுகிறது, ஆனால் உண்மையில் அப்போஸ்தலர்கள் இடர்ப்பாடு மிகுந்த ஒரு சோதனையில் தோல்வியடைந்து இருந்தார்கள் என்று மாற்கு சுவிசேஷ விபரம் சுட்டிக் காண்பிக்கிறது. மாற்கு, "... அவர்கள் தங்களுக் குள்ளே மிகவும் பிரமித்து ஆச்சரியப்பட்டார்கள். ... அப்பங்களைக் குறித்து அவர்கள் உணராமற் போனார்கள்" (மாற். 6:51ஆ, 52ஆ). கிறிஸ்து நிகழ்த்திய ஒவ்வொரு அற்புதமும் அவரது அக்கறை உணர்வை வெளிப் படுத்தியதுடன், இறையியல் மறை கருத்துக்களையும் கொண்டிருந்தன. "அப்பங்களின் நிகழ்ச்சியில்'' இருந்து சீஷர்கள் ஆதாயப்படுத்தியிருக்க வேண்டிய ''உட்கண்ணோக்கு'' என்னவாக இருந்தது? அவர்களுக்குச் சமவெளியில் உணவளிக்கக் கூடிய வல்லமை அவருக்கு இருந்தது என்றால், அவர்களைக் கடலில் காப்பாற்றக் கூடிய வல்லமையும் அவருக்கு இருந்தது என்று அவர்கள் அறிந்திருக்க வேண்டும்.*

*மாற்கு சுவிசேஷத்தின்படி, "அவர்களுடைய இருதயம் கடினமுள்ளதாயிருந்தது" என்பதே அவர்களின் பிரச்சனையாக இருந்தது (மாற். 6:52ஆ). அவர்கள், விசுவாசத்தின் அளவை என்ற வகையில் இயேசுவைப் புரிந்து கொண்டு மதித்திருந்தார்கள், ஆனால் அவர்கள் தங்கள் வாழ்வையும் இருதயங்களையும் முற்றிலுமாக அவருக்கு அர்ப்பணித்தல் என்பது அவர்களுக்குக் கடினமானதாக இருந்தது. அந்தக் குறிப்பிட்ட பிரச்சனை பன்னிருவரிடம் தொடங்கவுமில்லை [அதற்கு முன்பும் இருந்து வந்தது] அல்லது அவர்களுடன் ஒழியவுமில்லை [அதற்குப் பின்பும் தொடருகிறது].*

## கூட்டம் மிகுந்திருந்த ஒரு ஜெப ஆலயத்தில் ஒரு சோதனை (மத். 14:34-36; மாற். 6:52-56; யோவா. 6:21ஆ-71)

*புயல் வீசிய அந்த இரவில் இன்னும் ஒரு அற்புதம் இருந்தது. இயேசுவும் பேதுருவும் படகில் ஏறிய உடனேயே, "உடனே படவு அவர்கள் போகிற கரையைப் பிடித்தது" என்று யோவான் எழுதினார் (யோவா. 6:21ஆ). அவர்கள் கெனேசரேத்தின்[26] சமவெளியில் இருந்த கரைப்பகுதிக்கு வந்து சேர்ந்தனர், இது கப்பர்நகூமின் தென்பகுதியில் இருந்த ஒரு வளமான பகுதியாக இருந்தது (மத். 14:34; மாற். 6:53). இயேசு கப்பர்நகூமை நோக்கி வடக்குமுகமாக முன்னேறினார், அவ்வாறு செல்லுகையில் மக்களைக் குணமாக்கிக் கொண்டே சென்றார் (மத். 14:35, 36[27]; மாற். 6:54-56).*

*இதற்கிடையில், கடலின் கிழக்குப் பகுதியில் இருந்த கூட்டத்தார், இயேசு அங்கில்லை என்பதை அறிந்தார்கள் (யோவா. 6:22, 24). மேற்குக் கரைப் பகுதியில் இருந்து படகுகள் வந்தபோது, அவர்கள் இயேசு இருக்குமிடம் என்று தாங்கள் எதிர்பார்த்த பகுதியான கப்பர்நகூமுக்குத் தங்களை இட்டுச் செல்ல வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள் (யோவா. 6:23, 24).[28]*

### விசுவாசம் சோதிக்கப்பட்டது: "நான் உங்களுக்கு ஜீவனைத் தர முடியும் என்று நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா?"

*கிறிஸ்துவைத் தேடிக் கொண்டு வந்தவர்கள் அவர் ஜெப ஆலயத்தில் போதித்துக் கொண்டிருக்கக் கண்டார்கள் (யோவா. 6:59). தாங்கள் அறியாமல் அவர் எப்படி புறப்பட்டு வந்திருந்தார் என்று குழப்பமும் திகைப்பும் அடைந்த அவர்கள் (யோவா. 6:22), "ரபீ, நீர் எப்பொழுது இவ்விடம் வந்தீர்?" என்று கேட்டார்கள் (யோவா. 6:25ஆ). இது அந்த நாளில் கர்த்தரிடத்தில் கேட்கப்பட்ட கேள்விகளில் முதலாவதாக இருந்தது. அவரைக் கேள்வி கேட்டவர்கள், தாங்கள் அவரைச் சோதிப்பதாக நினைத்தார்கள்; உண்மையில், கேள்வி கேட்டவர்களே சோதனைக்கு உட்படுத்தப்பட்டார்கள். அது அவர்களின் விசுவாசத்தை - அல்லது அவர்களின் விசுவாசக் குறைவை வெளிப்படுத்தும் வேளையாக இருந்தது. உண்மையில், சோதனைகளின் ஒரு வரிசைமுறை தொடுக்கப்பட்டது, இது*

கூட்டத்தாரிடம் தொடங்கி, அப்போஸ்தலர்களிடத்தில் நெருக்கமாக்கப் பட்டது. அங்கிருந்த ஒவ்வொருவரும், "இந்த மனிதரிடத்தில் என்னை ஈர்ப்பது எது? நான் ஏன் இவரைப் பின்பற்றுகின்றேன்? உண்மையில் இவர் யாரென்று நான் நினைக்கின்றேன்?" என்றெல்லாம் கேட்டுக்கொள்ள வேண்டும் என்று இயேசு விரும்பினார்.

(1) *கூட்டத்தார் சோதிக்கப்பட்டார்கள்.* இயேசு கப்பர்நகூமுக்கு வந்து சேர்ந்தது பற்றிய கேள்விக்கு விடையளிப்பதற்குப் பதிலாக, அவர் ஜீவ அப்பம் பற்றிய உரையாடலைத் தொடங்கினார். அவர் அந்தக் கூட்டத்தார் தவறான காரணத்திற்காகத் தம்மைப் பின்பற்றுவதைக் குறித்துக் குற்றம் சாட்டினார்:[29]

> ... நீங்கள் அற்புதங்களைக் கண்டதினால் அல்ல, நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அழிந்து போகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள் (யோவா. 6:26, 27அ).

கிறிஸ்து, தமது உரையைக் கேட்டவர்கள் தங்கள் நோக்கங்களையும் முன்னுரிமைகளையும் ஆய்வு செய்ய வேண்டும் என்று விரும்பினார் - ஆனால் அவர்கள் *கிரியை நடப்பித்தால் அழிந்துபோகாத* உணவை பெற்றுக்கொள்ள முடியும் என்பதே அவர்கள் கேள்விப்பட்டதாக இருந்தது. அவர்கள், "தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்கள் (யோவா. 6:28). இது இயேசுவுக்கு, அவரது எடுத்துரைப்பை அறிமுகப்படுத்த ஒரு வாய்ப்பை அளித்தது: "அவர் அனுப்பினவரை விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது" என்றார் (யோவா. 6:29).

கலந்துரையாடல் முன்னேறிச் சென்று கொண்டிருந்த திசையைக் கூட்டத்தார் விரும்பவில்லை. பரிசேயர்களிடம் இருந்து தங்களது குறிப்பை எடுத்துக் கொண்ட (மத். 12:38ஐக் காணவும்) அவர்கள், ஒரு அடையாளத் தைக் கேட்டார்கள்: "அப்படியானால் உம்மை விசுவாசிக்கும்படிக்கு நாங்கள் காணத்தக்கதாக நீர் என்ன அடையாளத்தைக் காண்பிக்கிறீர்?" (யோவா. 6:30). முந்தின நாளில்தான் கிறிஸ்து அவர்களுக்கு, குணமாக்குதல் மற்றும் அற்புதமாக உணவளித்தல் என்பவற்றின் அடையாளங்களைக் கொடுத்திருந்தார் ஆனால் அது போதுமற்றதாக இருந்தது. கடினப்பட்ட இருதயம் கொண்டவர்களுக்கு எந்த அடையாளமும் எப்போதும் போதுமானதாக இராது.

இன்னொரு இலவச உணவு என்பதுதான் அவர்கள் உண்மையாக விரும்பியதாயிருந்தது. இயேசு மோசேயைப் போன்ற தீர்க்கதரிசி என்று அவர்கள் ஒப்புக்கொண்டிருந்தார்களே,[30] மற்றும் மோசே அவர்களின் பிதாக்களுக்கு வனாந்தரத்திலே அப்பத்தைக் கொடுத்திருந்தார் - அதுவும் ஒருமுறையல்ல, ஆனால் ஒவ்வொரு நாளும் கொடுத்திருந்தார் (யோவா. 6:31; யாத். 16ஐக் காணவும்)! மோசேயல்ல மாறாக, தேவனே அவர்களுக்கு

*அப்பத்தைக் கொடுத்திருந்தார் என்று இயேசு பதில் அளித்தார் (யோவா. 6:32அ). மற்றும் தேவன், "உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கிற, வானத்திலிருந்து வந்த மெய்யான அப்பத்தை'' இப்பொழுது அவர்களுக்குக் கொடுக்க முடியும் (யோவா. 6:32ஆ, 33ஆ).*

*"ஜீவனைக் கொடுக்கிற'' அப்பம் - அதுவே மிகச் சரியாக அவர்கள் விரும்பியதாக இருந்தது! அவர்கள், ''ஆண்டவரே, இந்த அப்பத்தை எப்பொழுதும் எங்களுக்குத் தர வேண்டும்" என்றார்கள் (யோவா. 6:34).*[31] *மீண்டும் ஒருமுறை இயேசுவின் பதிலானது எதிர்பாராத - மற்றும் வரவேற்பு அற்ற - ஒரு திருப்பத்தை மேற்கொண்டது. அவரது உதடுகளில் இருந்து பின்வரும் திகைக்க வைத்த உறுதிப்பாடு வந்தது: "ஜீவ அப்பம் நானே" (யோவா. 6:35அ). இது, கிறிஸ்து கூறியதாக யோவான் சுவிசேஷத்தில் காணப்படும் "நானே" என்ற ஏழுகூற்றுகளில் முதலாவதாக உள்ளது.*[32] *அவை ஒவ்வொன்றும் தனிச்சிறப்பான முக்கியத்துவம் கொண்டுள்ளன, ஆனால் ஒவ்வொன்றும் அவரது தெய்வீகத்துவத்தின் உறுதிப்பாடாகவும் உள்ளது; ஏனெனில், தேவன் மாத்திரமே எந்த நாளிலும் எந்தக் காலத்திலும், "நானே" (வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், ''நான் எப்பொழுதும் இருக்கிறேன்"; யாத். 3:13-15ஐக் காணவும்) என்று உண்மை நிறைவுடன் கூறமுடியும்.*

*இயேசு திகைக்க வைக்கும் தமது கூற்றைத் தொடர்ந்தார்: "என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்" (யோவா. 6:35ஆ). அங்கு, மீண்டும் "விசுவாசம்" என்ற விடாப்பிடியான வார்த்தை இருந்தது!*[33] *அவர் கவலையுடன், ''நீங்கள் என்னைக் கண்டிருந்தும் விசுவாசியாமலிருக்கிறீர்கள்'' என்று கூடுதலாகக் கூறினார் (யோவா. 6:36).* J. W. *மெக்கார்வீ அவர்கள் பின்வருமாறு எழுதினார்:*

> *இயேசுவின் ஆளுமைத் தன்மை என்பது அவரது தெய்வீகத்துவத்திற்கு மாபெரும் நிரூபணமாக இருந்தது, ஆனால் யூதர்கள் ... அதை ஆழ்ந்து சிந்திக்க மறுத்துவிட்டார்கள், மற்றும் அவர்கள் ஒரு அடையாளத்திற்காகத் தொடர்ந்து ஆரவாரம் செய்தார்கள் ... ஒருவர் சூரிய வெளிச்சத்தைக் காணுகின்றபோது, அதன் வெப்பத்தை உணருகின்றபோது, மற்றும் அதன் உயிர்கொடுக்கும் வல்லமையை கண்ணோக்கும்போது கூட, அதை [சூரியன் இருப்பதை] நம்ப மறுத்தால், அவருக்கு நீங்கள் எந்த அடையாளத்தினால் செயல் விளக்கப்படுத்துவீர்கள்?*[34]

*(2) "யூதர்கள்'' சோதிக்கப்பட்டார்கள். அந்த வேளையில், " 'நான் வானத்திலிருந்து வந்த அப்பம்' என்று அவர் சொன்னதினிமித்தம் 'யூதர்கள்' அவரைக் குறித்து முறுமுறுத்தார்கள்'' (யோவா. 6:41). யோவான், யூதத்தலைவர்களைக் குறிப்பதற்கு ''யூதர்கள்'' என்ற சொற்றொடரை அடிக்கடி பயன்படுத்தினார் (1:19; 5:10, 15, 16, 18), மற்றும் ஒருவேளை அதுவே இவ்விடத்தில் அர்த்தப்படுவதாகவும் இருக்கலாம்.*

*யூதர்கள் முறுமுறுத்ததையும் பொருட்படுத்தாமல், இயேசு தமது உரிமைகோருதலைத் திரும்பப் பெறுவதற்கு மறுத்து விட்டார். மாறாக,*

அவர் அதை இன்னும் உறுதியாக்கினார்:

> ஜீவ அப்பம் நானே. உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள். இதிலே புசிக்கிறவன் மரியாதிருக்கும்படி வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே. நானே வானத்திலிருந் திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக் கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார் (யோவா. 6:48-51).

ஆவிக்குரிய வாழ்வைக் (யோவா. 10:10) கொண்டு வருவதற்காக இயேசு மாம்சமாக வேண்டியிருந்தது (யோவா. 1:14). மற்றும், ஒரு சில மாதங்களில், அவர் "உலகத்தின் ஜீவனுக்காக" சிலுவையில் அறையப்படும் படி தமது மாம்சத்தை மனப்பூர்வமாக "கையளிக்க" இருந்தார். இப்படிப் பட்ட மேன்மையான கருத்துக்கள், மூடப்பட்ட சிந்தைகொண்ட யூதர்களின் புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. விளக்கம் தரும்படி கிறிஸ்துவிடம் தாழ்மையாகக் கேட்பதற்குப் பதிலாக, அவர்கள் "இவன் தன்னுடைய மாம்சத்தை எப்படி நமக்குப் புசிக்கக் கொடுப்பான்? என்று தங்களுக்குள்ளே வாக்குவாதம் பண்ணினார்கள்" (யோவா. 6:52). இதற்கு இயேசுவின் பதிலானது இன்னும்கூட அதிகம் திகைப்பூட்டுவதாக வும் புதிரானதாகவும் இருந்தது: "நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணாம லும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவா. 6:53).

மதரீதியான கருத்தமைவில், "அப்பம் புசித்தல்" என்ற உருவகம் யூதர்களுக்கு நன்கு பழக்கமானதாக இருந்தது. டேவிட் ஸ்மித் அவர்கள், "வேத வசனங்களிலும் ரபீத்துவ இலக்கியத்திலும், அறிவுறுத்துதல் என்பது அப்பம் என்றும் அதை கிரகித்துக் கொள்ளுகின்றவர்கள் அதை உண்ணு கின்றார்கள் என்றும் ஒன்றுபோலவே அழைக்கப்பட்டதால், இப்படிப் பட்ட மொழிநடையானது, நவீன காலத்தில் வாழ்பவர்களின் காதுகளுக்குக் கேட்பதைக்காட்டிலும் யூதர்களுக்கு குறைந்தபட்சம் வினோதமாகவே இருந்தது" என்று சுட்டிக்காண்பித்தார்.[35] இருந்தபோதிலும், மாம்சத்தைப் புசித்தல் மற்றும் இரத்தத்தைப் பானம் பண்ணுதல் என்பது பற்றிய சிந்தனை அவர்களுக்கு வெறுப்பூட்டுவதாக இருந்திருக்க வேண்டும். இரத்தத்தை உண்ணுதல் அல்லது குடித்தல் என்பதை நியாயப்பிரமாணம் கண்டனம் செய்திருந்தது (லேவி. 17:10-14).

இயேசு தமது உண்மையான உடல் மற்றும் இரத்தத்தை உண்டு குடித்தல் என்ற மனித மாம்சம் உண்ணும் கருத்தைப் பற்றிப் பேசவில்லை,[36] ஆனால் அதற்கு மாறாக, அவரை "மாம்சத்தில் உள்ள" மேசியா என்று ஏற்றுக்கொள்வதைப் பற்றிப் பேசினார். உண்மையில் அவர், நம்பிக்கையற்ற வர்களுக்கு "தமது மாம்சத்தை உண்ணுதல்" எவ்வாறு என்று ஏற்கனவே கூறியிருந்தார், ஆனால் அவர்கள் அதைக் கவனித்திருந்ததில்லை:

> ... அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற

*கிரியையாயிருக்கிறது (யோவா. 6:29).*

*... என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான் (யோவா. 6:35).*

*... நீங்கள் என்னைக் கண்டிருந்தும் விசுவாசியாமலிருக்கிறீர்கள் (யோவா. 6:36).*

*குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்திய ஜீவனை அடைவதும், ... என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது (யோவா. 6:40).*

*என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (யோவா. 6:47).*

இதை ஆழ்ந்து சிந்தியுங்கள்: "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு *நித்திய ஜீவன் உண்டு*" என்று இயேசு கூறினார் (யோவா. 6:47; வ. 40 ஐயும் காணவும்). அதற்குச் சற்றுப் பின்பு அவர், "என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு *நித்திய ஜீவன் உண்டு*" என்று கூறினார் (யோவா. 6:54அ). ஜீவனுக்கு இரண்டு வழிகள் இல்லாதிருக்கும் வரையிலும் (ஒரே ஒரு வழிதான் உள்ளது; யோவா. 14:6), "அவரது மாம்சத்தைப் புசித்து அவரது இரத்தத்தைப் பானம்பண்ணுதல்" என்பது "அவரில் விசுவாசமாயிருத்தல்" என்பதற்குச் சமமாயுள்ளது.

அவரைப் பற்றி அறிந்துகொள்ளுதல் பின்பு நாம் அறிந்தவற்றை ஏற்றுக்கொள்ளுதல் ஆகியவற்றினால் நமது விசுவாசம் வருகிறது. கிறிஸ்து, " 'எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள்' என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே;[37] ஆகையால் பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக்கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்" என்று கூறினார் (யோவா. 6:45). மேலும் அவர், "நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது" என்றும் கூறினார் (யோவா. 6:63ஆ).

நாம் உண்பதினால் உணவைத் தன்மயமாக்கிக் கொள்ளுதல் போலவே, இயேசுவைப் பற்றிக் கற்றுக்கொள்வதினால், அவரை ஏற்றுக்கொள்வதினால், அவரில் விசுவாசம் கொள்வதினால், அவருக்கு கீழ்ப்படிவதினால் நாம் அவரைத் தன்மயமாக்கிக் கொள்ளுகின்றோம். நாம் உண்ணுகின்ற உணவு நமது உடல்களின் பாகமாவது போலவே, கிறிஸ்துவின் சிந்தனைகளும் பண்பும் நமது ஆத்துமாக்களின் பாகமாக வேண்டும். ஜானி இராம்ஸே அவர்கள், " 'எனது ஆவியை உள்ளீர்த்துக் கொள்ளுங்கள், எனது சிந்தனை போலவே சிந்தியுங்கள், எனது நடத்துவத்தைப் பின்பற்றுங்கள்; ஆம், பரலோகத்தின் வழிகளில் ஆழ்ந்திருங்கள்' என்று அவர் புத்தி கூறுகின்றார்!" என்று எழுதினார்.[38] நாம் "திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாக" இருக்க வேண்டும் (2 பேது. 1:4), கிறிஸ்து நம்மிடத்தில் "உருவாக" அனுமதிக்க வேண்டும் (கலா. 4:19), பவுலுடன் சேர்ந்து, "... இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" (கலா. 2:20) என்று கூறக்கூடிய நிலைக்கு நாம்

வரும் மட்டும், அறைகூவல் விடுக்கப் படுகின்றோம்.

யோவான் 6ல் இயேசு தமது மாம்சத்தை உண்ணுதல் மற்றும் தமது இரத்தத்தைக் குடித்தல் பற்றிப் பேசியபோது, அவர் கர்த்தருடைய இராப்போஜனத்தைத் தமது சிந்தையில் கொண்டிருக்கவில்லை. நம்மில், இராப்போஜனத்தின் அடையாளத்துவத்தில் பழக்கமாகியுள்ளவர்கள் வசனம் 53 முதல் 56 வரையான பகுதியில் கிறிஸ்துவின் சொல்லாக்கத்தினால் அதைப் பற்றி நினைவூட்டப்படுதல் என்பது இயல்பானதாகவே உள்ளது. ஆயினும், இவ்விடத்தில் கிறிஸ்து, கர்த்தருடைய பந்தியில் கலந்து கொள்ளுதல் பற்றியல்ல, ஆனால் தம்மை மேசியா என்று யூதர்கள் ஏற்றுக்கொள்ளுதல் பற்றியே அக்கறை உள்ளவராயிருந்தார் என்பதை சந்தர்ப்பப் பொருள் தெளிவாக்குகிறது. விசுவாசம் - அல்லது விசுவாசக் குறைவு - என்பதுதான் ஜீவ அப்பம் பற்றிய பிரசங்கத்தின் முக்கிய விஷயமாக உள்ளது.

*(3) சீஷர்கள் சோதிக்கப்பட்டார்கள்.* மன இறுக்கம் தொடர்ந்து கட்டியெழுப்பப்பட்டது: "அவருடைய சீஷரில் அநேகர் இவைகளை[ஜீவ அப்பமாயிருத்தல் பற்றிய இயேசுவின் வார்த்தைகளை]க் கேட்ட பொழுது, இது கடினமான உபசேதம், யார் இதைக் கேட்பார்கள் என்றார்கள்" (யோவா. 6:60). முறுமுறுத்தவர்களாய் இருந்த (யோவா. 6:61அ) இந்தப் பிந்திய குழுவினர் அவரது விரோதிகளாகவோ அல்லது ஆழமற்ற சிந்தனை கொண்டு, அப்பம் தேடும் கும்பலின் பிரதிநிதிகளாகவோ இருக்கவில்லை என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். மாறாக இவர்கள் இயேசுவின் சீஷர்களாய் இருந்தார்கள், இவர்களில் சிலர் அவரை நீண்ட காலமாகப் பின்பற்றியிருந்தார்கள். ("சீஷர்கள்" என்ற சொற்றொடர் பன்னிருவரையும் [யோவா. 6:64], அத்துடன் அவருக்கு ஏறக்குறைய முழுநேர சீஷர்களாயிருந்த எஞ்சின மற்றவர்களையும் [லூக் 6:13] உள்ளடக்கிற்று.)

இயேசுவின் போதனை, அவரைப் பின்பற்றியவர்களைக் கலவரம் அடையச் செய்தது ஏன்? அது அரசியல் ரீதியான, பட்டயம் வீசும் மேசியா என்ற அவர்களின் முன்கருத்துக்களுக்கு நேர்மாறாக இருந்தது. கிறிஸ்து கவலையுடன் அவர்களிடத்தில், "இது உங்களுக்கு இடறலாயிருக்கிறதோ? மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்?" என்று கேட்டார் (யோவா. 6:61ஆ, 62). வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், "நான் சரீரத்திற்கு உரியவைகளுக்குப் பதிலாக ஆவிக்குரியவைகளின்மீது கவனம் செலுத்துகின்ற காரணத்தினால் என்னை மேசியா என்று ஏற்றுக்கொள்வது உங்களுக்குக் கடினமாயிருந்தால், நீங்கள் எதிர்பார்த்துள்ள வகையிலான இராஜ்யத்தை நிலைநாட்டாமலேயே நான் இந்த பூமியை விட்டுச் செல்லுவதை நீங்கள் எப்படிக் கையாளப் போகின்றீர்கள்?" என்றே அவர் கேட்டார். இயேசு பரலோகத்திற்கு ஏறிச் சென்றது - தமது மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்குப் பின்பு வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளன்று - இராஜ்யம்/சபை நிலைநாட்டப்படுதலை விளைவித்தது, ஆனால் அவரது பின்பற்றாளர்கள் ஒரு மாறுபட்ட வகையிலான இராஜ்யத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

*ஆவிக்குரிய விஷயங்கள் சரீரத்திற்குரிய விஷயங்களைவிட எவ்வளவோ அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை என்று இயேசு மீண்டும் வலியுறுத்தினார் (யோவா. 6:63); ஆனால் மீண்டும் ஒருமுறை அவர், "ஆகிலும் உங்களில் விசுவாசியாதவர்கள் சிலர் உண்டு ..." என்று முடிவு செய்ய வேண்டியிருந்தது (யோவா. 6:64அ). நான் இந்தப் பாடத்தின் தொடக்கத்தில், கிறிஸ்துவின் இந்த உரையானது அவரது ஊழியத்தின் மிகத்தாழ்ந்த வேளைகளில் ஒன்றுக்கு உடனடி காரணமாய் இருந்தது என்று குறிப்பிட்டிருந்தேன். இவ்விடத்தில் அந்த மிகத் தாழ்ந்த வேளை உள்ளது: "அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப்போனார்கள்" (யோவா. 6:66).[39]*

*இயேசுவின் விசுவாச சோதனை முறுமுறுத்தலையும், விவாதத்தையும் கடைசியில் பின்வாங்கிச் செல்லுதலையும் புறக்கணித்தலையும் உண்டாக்கிற்று. அவரது "வகுப்பில்" இருந்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் இந்தச் சோதனையில் தோல்வியடைந்தார்கள்.*

*(4) அப்போஸ்தலர்கள் சோதிக்கப்பட்டார்கள். மிகவும் இடர்ப்பாடான சோதனை இன்னும் இருந்தது. கிறிஸ்து பன்னிருவரிடம் திரும்பி, "நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ?" என்று கேட்டார் (யோவா. 6:67). அந்த வார்த்தைகளில் கவலையையும் அக்கறையையும்கூட நாம் நிச்சயமாகவே உய்த்து உணருகின்றோம்.*

*பேதுருவின் பதில் அவரது [இயேசுவின்] இருதயத்திற்குக் களிப்பூட்டியிருக்க வேண்டும். அப்போஸ்தலர்களுக்காகப் பேசிய அவர் [பேதுரு], ''ஆண்டவரே, யாரிடத்தில் போவோம். நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே. நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம்" என்று கூறினார் (யோவா. 6:68, 69). சந்தர்ப்பப் பொருளில், "நாங்கள் விசுவாசித்து இருக்கிறோம்'' என்பவை திறவுகோல் வார்த்தைகளாக உள்ளன. அவர்களின் விசுவாசம் பூரணப்பட்டதாக இருந்ததா? கிறிஸ்து யார் என்பதை அவர்கள் முழுமையாகப் புரிந்துகொண்டிருந்தார்களா? இராஜ்யத்தின் உண்மையான இயல்பு அவர்களின் சிந்தைகளில் தெளிவாயிருந்ததா? இல்லை, இல்லை. இருந்தாலும், அவர்கள் இயேசுவே மேசியா என்று நம்பியிருந்தார்கள், அவருக்குத் தங்களை அர்ப்பணித்திருந்தார்கள். அவர்களின் விசுவாசம் வளர்ந்துகொண்டு இருந்தது. அவர்கள் சோதனையில் தேறியிருந்தார்கள்!*

*நான் அதை மறுசொற்றொடராக்க அனுமதியுங்கள்: அவர்களில் பெரும்பான்மையானோர் சோதனையில் தேறியிருந்தார்கள். பேதுரு அதை அறியாதிருந்தார்,[40] ஆனால் அவர் அப்போஸ்தலர்களில் பதினோரு பேருக்காக மட்டுமே பேசினார். ஜீவ அப்பம் பற்றிய பிரசங்கத்தைச் சுற்றி நடந்த நிகழ்ச்சிகள், யூதாஸ் இயேசுவை முற்றாகப் புறக்கணிப்பதற்கு அடிப்படைக் காரணியாக இருந்தன என்று நமது வேத வசனப் பகுதிகள் சுட்டிக்காண்பிக்கின்றன (யோவா. 6:64, 70, 71).[41] இந்த வேளையில் மற்ற பலர் சரீரப்பிரகாரமாக பிரிந்து சென்றதுபோல யூதாஸ் பிரிந்து சென்றுவிடவில்லை, ஆனால் அவனது இருதயம் இனியும் ஆண்டவருடன்*

இல்லாதிருந்தது. பூமிக்குரிய அரியணையையும் அதனுடன் உதவியாக வந்த ஆதாயங்கள் யாவற்றையும் இயேசு மறுத்தபோது, அது யூதாஸுக்கு ஏமாற்றத்தைப் பெருக்கெடுக்கச் செய்திருக்க வேண்டும்[42] (யோவா. 6:15). இயேசுவின் வார்த்தைகள் கூட்டத்தாரைத் துரத்தி விட்டபோது, அவிசுவாசம் அவனை மூழ்கடித்திருக்க வேண்டும்; அது ஒரு பேரரசைக் கட்டி எழுப்புவதற்கான வழியாக இருந்ததில்லை! குழுவினர் என்ற வகையில் பன்னிருவரும் சோதனையில் தேறுவதற்குரிய மதிப்பெண்களைப் பெற்றிருந்தார்கள், ஆனால் யூதாஸ் பரிதபிக்கத்தக்க வகையில் தோல்வியடைந்தான்.

## முடிவுரை

அப்போஸ்தலர்களுக்கு வேறு சோதனைகளும் இருந்திருக்கும் (மத். 16:13ஐக் காணவும்), ஆனால் இயேசுவைப் பின்பற்றுவதாக உரிமைகோரியவர்களுக்கு சோதிக்கப்படுதலின் வேறு எந்த வேளையும் இவ்வளவு விரிவான செயல்விளைவைக் கொண்டிருந்தது இல்லை. நாம் உய்த்துணர்ந்தாலும் இல்லை என்றாலும், நீங்களும் நானும் இதே பரீட்சைகளுக்கு இன்னமும் உட்பட்டவர்களாக இருக்கின்றோம்:

1. எனது தேவைகளின்மீது அக்கறை கொள்வதில் நான் அவர்மீது நம்பிக்கை கொள்ளுகின்றேனா அல்லது பிரச்சனைகள் எழுகின்றபோது நான் சிடுசிடுத்து அமளி செய்கின்றேனா?
2. என்னைப் பாதுகாப்பார் என்று நான் அவர்மீது நம்பிக்கை கொள்ளுகின்றேனா அல்லது எனது வாழ்வில் சிரமம் வருகிறபோது நான் பயத்தில் புரளுகின்றேனா?
3. எனக்கு அவர் வாழ்வைத் தருவார் என்று நான் அவர்மீது நம்பிக்கை கொள்ளுகின்றேனா? நான் அப்படிச் செய்தால், என் வாழ்வை அவருக்குத் தருவேன்.

நினைவில் வையுங்கள்: விசுவாசம் உள்ளவர், உண்மையான விசுவாசம் உள்ளவர் மாத்திரமே தேர்ச்சிக்குரிய மதிப்பெண்களைப் பெறுகின்றார்.

## குறிப்புகள்

இந்தப் பாடத்துடன் பிணைப்பதற்கான பிரசங்கம் பற்றிய எனது தேர்வில் நான் போராடினேன். அற்புதமாய் உணவளித்தது பற்றிய ஒரு பிரசங்கத்தையும் ஜீவ அப்பத்தின்மீதான உரை பற்றிய ஒரு பிரசங்கத்தையும் தயாரிக்க நான் விரும்பினேன். ஆயினும் ஒவ்வொரு பாடத்திலும் இரண்டிரண்டு பிரசங்கங்களைத் துணைவைக்கும் நடைமுறையை ஏற்படுத்த நான் விரும்பவில்லை. ஜீவ அப்பம் பற்றிய வசனப் பகுதியானது மாணவர்களுக்கு குறைவான பழக்கமுடையதாகையால் அதைத் தேர்ந்து கொள்ள நான் சாய்ந்தேன், ஆனால் ஐயாயிரம் பேருக்கு உணவளித்த நிகழ்ச்சியானது தொடக்க காலக் கிறிஸ்தவர்களுக்கு மிகவும் முக்கியமானதாக இருந்த காரணத்தினாலும்,[43] அது இன்றைய நாட்களின் கிறிஸ்தவர்

களின் மத்தியில் இன்னமும் பிரபலமாயிருப்பதாலும் நான் இதையே தேர்ந்து கொண்டேன். இந்த நிகழ்ச்சியின் மீதான எனது விளக்கவுரை முயற்சிகள் இந்தப் பாடத்தைத் தொடர்ந்து வருகின்றன.

ஜீவ அப்பத்தின் மீதான உரை பற்றி நான் ஒரு பிரசங்கத்தைத் தயாரித்திருந்தால், "தவறான நோக்கங்களுக்காகத் தேவனைத் தேடுதல்" என்பதே எனது அணுகுமுறையாக இருந்திருக்கும். இயேசு, தாம் பொழியக்கூடிய ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கு மாறாக, தாம் அளிக்கக் கூடிய சரீரப்பிரகாரமான பயன்களின்மீது அடிப்படை ஆர்வம் கொண்டிருந்த பின்பற்றாளர்களால் சூழப்பட்டு இருந்தார். நம்மைப் பற்றிய விஷயம் என்ன?

உண்மையில், இந்தப் பாடம் பிரசங்கத்துவ சாத்தியக்கூற்றினால் நிறைந்து வெடிக்கும் நிலையில் உள்ள வசனப்பகுதிகள் பொதியப்பட்டதாக உள்ளது. பிறருக்கு உதவுதல் என்ற கருத்தைப் பிரசங்கிப்பதற்காக, ஐயாயிரம் பேருக்கு உணவளித்தலின் வரலாற்றை நான் பயன்படுத்தினேன். இது சுவிசேஷ ஊழியத்தின் அவசியம் என்பதன் மீதானதொரு பிரசங்கத் திற்குத் தழுவிக்கொள்ளப்பட முடியும்: "திரளான கூட்டத்தாருக்கு உணவளித்தல்": (1) கூட்டத்தாரின் சரீரப்பிரகாரமான தேவைகள்மீது இயேசு அக்கறையாயிருந்தது போல் நாம் திரளான கூட்டத்தாரின் ஆவிக்குரிய தேவைகள்மீது அக்கறையாக இருக்க வேண்டும். (2) திரளான கூட்டத்தாருக்கு ஆவிக்குரிய வகையில் உணவளிப்பதற்கு, நாம் நமது சொந்த ஆதாரமூலங்களுக்கும் அப்பால் கண்ணோக்கவும், கர்த்தரைச் சார்ந்திருக்கவும் கற்றுக் கொள்ளவும் வேண்டும். (3) ஆவிக்குரிய போஷிப் பானது கர்த்தரிடத்திலிருந்து (வசனத்திலிருந்து) வருகிறது. அதனை நமது பொறுப்பு தொடங்கி வைப்பதில்லை, ஆனால் - அப்போஸ்தலர்கள் செய்ததுபோல் அதனைப் பகிர்ந்து கொள்ளுவதில் இருக்கிறது.

இயேசு தண்ணீரின்மீது நடந்த மற்றும் புயலை அமர்த்திய வரலாற்றை ஆழ்ந்து சிந்தியுங்கள்: இந்த நிகழ்ச்சியின்மீதான ஒரு பிரசங்கத்திற்கு "கிறிஸ்து தொலைவில் இருப்பவராகக் காணப்படும்போது" என்று தலைப்பிடலாம். சாத்தியமான பிரதானக் கருத்துக்கள் இங்கு தரப்படுகின்றன: (1) நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து இருக்கும்போது கூட புயல்கள் வருகின்றன. (2) உங்கள் வாழ்வில் புயல்கள் வீசுகின்றன பொழுதும் அதை இயேசு அறிந்தவராயிருக்கிறார். (3) புயல்கள் வரும் போது, உங்கள் பலவீனங்களைக் கண்ணோக்காமல், அவருடைய பலத்தைச் சார்ந்திருங்கள். (4) அவர் புயலை அமர்த்த முடியும் என்று விசுவாசியுங்கள். (5) அமர்த்துதலுடன் எதிர்பாராத ஆசீர்வாதங்களும் வரக்கூடும் (யோவா. 6:21ஆ).

மேற்கண்ட வரலாற்றின் ஒரு பாகத்தை மட்டும் வைத்துப் பிரசங்கங் கள் பிரசங்கிக்கப்பட்டுள்ளன: பேதுரு தண்ணீரின்மீது நடந்தார் (மற்றும் மூழ்கினார்) - இந்தப் பிரசங்கத்தில், வாழ்வின் காற்றுகள் மற்றும் அலைகள் ஆகியவற்றைக் கண்ணோக்குவதற்குப் பதிலாக இயேசுவைக் கண்ணோக்கு தலை வலியுறுத்துதலும் இருக்கும்.

யோவான் 6ல் ஜீவ அப்பத்தின் மீதான இயேசுவின் உரையில் உள்ள மற்ற அம்சங்கள் பிரசங்கச் சாத்தியக்கூற்றினைக் கொண்டுள்ளன. எடுத்துக்

*காட்டாக, ஜீவ அப்பத்தின்மீதான உரையில் உள்ள ஒரு தனி வசனம் - “ஆண்டவரே யாரிடத்தில் போவோம்?” (யோவா. 6:68) - அர்த்தம் நிறைந்த பிரசங்கம் ஒன்றைத் தொடங்கும் இடமாக பயன்படக்கூடும். இயேசு ஒருவரே உலகின் பிரச்சனைகளுக்கு ஒப்பேறக்கூடிய தேர்ந்து கொள்ளு தலாக இருக்கின்றார் மற்றும் மக்களின் ஆத்துமாக்களுக்கு ஒரே நம்பிக்கை யாக இருக்கின்றார் என்பதை புரிந்து கொள்ளாத வரையிலும் சிலர் இயேசுவைப் பற்றித் தீவிரமாகச் சிந்திப்பதற்கு மறுத்துவிடுவார்கள்.*

*மீண்டுமாக கூட்டத்தார், வனாந்தரத்தில் தரப்பட்ட மன்னாவைத் தங்கள் சிந்தைகளில் கொண்டிருந்ததால், இதைக் கிறிஸ்து, ஜீவ அப்பத்து டன் நேரெதிராக ஒப்பிட்டார். அந்த நேரெதிர்ப் பண்பைக் காண்பிப்பதற்கு நீங்கள் ஒரு வரைவட்டவணையைத் தயாரிக்க விரும்பலாம், அது பிரசங்கித் தலுக்கான வரைக்குறிப்பாகப் பயன்படுத்தப்பட முடியும். உங்கள் சிந்தனை யைத் தூண்டக்கூடிய மாதிரி அட்டவணை ஒன்று குறிப்புகளுக்குப் பின் தரப்படுகிறது.*

---

*குறிப்புகள்*

*[1]இப்புத்தகத்தில் முன்புள்ள “நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா?” என்ற பாடத்தின் அறிமுகத்தை மீண்டும் வாசிக்கவும். [2]இயேசு இந்தப் பின்வாங்குதலை முன்மொழிந்தது ஏன் என்பதை மறுகண்ணோட்டமிட நீங்கள் விரும்பலாம் (முந்தின பாடத்தின் கடைசிப் பகுதியை மீண்டும் வாசியுங்கள்.) [3]இந்த நிகழ்ச்சி பற்றிய முழுமையான விவரத்திற்கு, தொடர்ந்து வரும் பிரசங்கத்தைக் காணவும். பாடத்தின் இந்த இடத்தில், நீங்கள் குறைந்தபட்சம் இந்த நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்த விரும்பலாம். (“மக்களுக்கு உண்மையிலேயே உதவி தேவைப்படுகிறபோது” என்ற அடுத்த பாடத்தின் அறிமுகப் பகுதியைக் காணவும்.) [4]மிகச் சரியாக இந்த கூற்று வேத வசனப்பகுதியில் தோன்றுவதில்லை என்றாலும், துணைக்கருத்துத் தலைப்புக்களில் நான் பயன்படுத்தும் இந்தக் கேள்வியும் மற்ற கேள்விகளும், இயேசு தமது அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்த சோதனைகளைப் பிரதிபலிக்கின்றன. [5]நான், துணைக் கருத்துத் தலைப்புக்களில் “நம்பிக்கை” என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றேன், ஏனெனில் நம்பிக்கை என்பது இரட்சிக்கும் விசுவாசத்தின் அத்தியாவசியமான பகுதியாக உள்ளது. [6]இது மறைமுகமாய் உணர்த்தப்பட்டுள்ளது. அவர்கள் ஏதேனும் உணவைக் கொண்டு வந்திருந்தால், அங்கு இருந்தது என்னென்ன என்பது பற்றி இயேசுவுக்கு அவர்கள் தந்த அறிக்கையில் நிச்சயமாக அதைப் பட்டியலிட்டிருப்பார்கள். இதை அவர்கள் செய்யவில்லை என்ற உண்மையானது அவர்கள் ஏரோதுவின் எல்லைப் பகுதிகளில் இருந்து பின்வாங்கிச் செல்ல வேண்டியதில் உள்ளடங்கியிருந்த அவசரத் தன்மைக்கு ஒரு சுட்டிக்காட்டுதலாக இருக்கலாம். அவர்கள் அருகாமையிலிருந்த ஊர் ஒன்றில் உணவு வாங்கிக்கொள்ளத் திட்டமிட்டு இருக்கலாம் (யோவா. 4:8ஐக் காணவும்). [7]இந்த விஷயம் குறித்த அவர்களின் இயலாமை நமது இவ்வரலாற்றின் பிற்பகுதியில் வலியுறுத்தப்பட்டுள்ளது; மாற். 6:42ஐ வாசிக்கவும். [8]அப்பம் மற்றும் மீன்கள் ஆகியவற்றின் அளவு குறித்து, தொடர்ந்து வரும் பிரசங்கத்தில் காணவும். [9]*“All-you-can-eat buffet” *என்பது, உண்பவர்கள் தாங்கள் திருப்தியடையும் வரையில் தங்கள் உணவுத் தட்டுகளை உணவுகளால் நிரப்பிக் கொள்ள அனுமதிக்கின்ற அமெரிக்க உணவு விடுதிகள் சிலவற்றில் பயன்படுத்தப்படுகிற சொற்றொடராக உள்ளது.*

*மக்கள் "வயிறாற" உண்டார்கள் என்று பெரும்பான்மையான சுவிசேஷ விவரங்கள் வலியுறுத்துவதால் நான் இந்தச் சொற்றொடரை இங்கு பயன்படுத்தியுள்ளேன். [10]யோவான் 6:26 வசனம், அவர்களின் பேரார்வத்தைச் சித்தரிக்கிறது.*

*[11]மோசேயைப் போல் ஒரு தீர்க்கதரிசியைத் தேவன் எழுப்புவார் என்ற மோசேயின் கூற்றை மக்கள் தங்கள் சிந்தையில் கொண்டிருந்திருப்பார்கள் என்பது உறுதி (உபா. 18:15). அடுத்த நாளில் இயேசு செய்த பிரசங்கமானது, மக்கள் அவரை மோசேயுடன் ஒப்பிட்டார்கள் என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது (யோவா. 6:31, 32, 49, 58). [12]இயேசுவின் ஊழியத்தின் முடிவுக்கு அண்மையில், கிறிஸ்து எருசலேமுக்குள் வெற்றிப் பிரவேசமாக நுழைந்த போது, இதே போன்ற உணர்வெழுச்சி கூட்டத்தாரைப் பற்றிக் கொண்டது (மத். 21:1-11, 14-17; மாற். 11:1-11; லூக். 19:29-44; யோவா. 12:12-19 ஆகியவற்றைக் காணவும்). [13]இயேசு, பிதாவினிடத்திற்கு திரும்ப எழுந்து செல்லாதவரையிலும் அவர் [இயேசு] ராஜாவாக முடிசூடப்படவில்லை என்பதில் ஒரு கருத்துள்ளது. ஆயினும், இயேசு தாமே "யூதர்களின் ராஜாவாக" இருப்பதை ஒப்புக் கொண்டதால் (மத். 27:11), ஞானிகளின் இந்தக் கூற்று மிகச் சரியானது என்று நாம் கண்ணோக்க வேண்டும். [14]அவர், அவர்களைப் பெத்சாயிதா/கப்பர்நகூமுக்குச் செல்லும்படி கூறினார் (மாற். 6:45; யோவா. 6:17). (இந்த பெத்சாயிதா கப்பர்நகூமுக்கு அருகில் இருந்தது, ஒருவேளை இது அதன் புறநகர்ப்பகுதியாக இருந்திருக்கலாம்.) இயேசு ஏன் தமது சீஷர்களைத் தம்மை விட்டுப் புறம்பே அனுப்பினார் என்பது நமக்குக் கூறப்படவில்லை. ஒருவேளை அவர், கூட்டத்தாரும் சென்று விடும்படி அவர்கள்மீது செல்வாக்குச் செலுத்துவதற்கு, தமது கட்டளையுடன் அவர்களின் இணக்கத்தையும் விரும்பியிருக்கலாம். ஒருவேளை அவர்கள் அந்தக் கூட்டத்தாரின் தவறாக வழிநடத்தப்பட்ட வைராக்கியத்தில் பிடிபடுவதை அவர் விரும்பாது இருந்திருக்க லாம். அவர்களும் கூட, இராஜ்யம் பற்றிய பொருளாதார ரீதியான தவறான கருத்துக்களுடன் போராடிக் கொண்டிருந்தார்களே. [15]கூட்டத்தில் பலர் பொதுவாகப் பார்வையில்படும் இடத்தில் தங்கியிருந்தார்கள் (யோவா. 6:22), ஆனால் இயேசு அவர்களைக் கலைந்து செல்லச் செய்ததின் மூலம் குறைந்தபட்சம் அவர்களின் உணர்வெழுச்சியைக் குளுமைப்படுத்தினார். [16]இது மறைமுகமாக உணர்த்தப்பட்டுள்ளது. அவர் கவலையாக இருப்பதற்குப் பல காரணங்களைக் கொண்டிருந்தார். அவரது அப்போஸ்தலர்களாலும் கூட்டத்தாராலும் அவ் வேளையில் காட்சிப்படுத்தப்பட்ட பொதுவான தவறான புரிந்து கொள்ளுதலுடன் கூடுதலாக, அவர் தமது உறவினரான யோவான் ஸ்நானனின் மறைவு குறித்துப் புலம்புவதற்கு இன்னும் ஒரு வாய்ப்பைப் பெற்று இருந்ததில்லை. [17]அந்தப் பகுதியில் ஒரு மலை இருந்தது (யோவா. 6:3). இயேசு திரளான கூட்டத்தினருக்குப் போதிக்க, மலையின் ஓரத்தில் அமர்ந்திருக்கலாம், பின்பு மக்களுக்கு உணவளிக்க சமவெளிப் பகுதிக்கு இறங்கி வந்திருக்கலாம். [18]*NASB*யில் [மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பில்] "மூன்று நாலு மைல் தூரம்" என்றுள்ளது (யோவா. 6:19).* KJV*யில்* "five and twenty or thirty furlongs" *என்றுள்ளது. கிரேக்க மொழியில் இருபத்தி ஐந்து அல்லது முப்பது stadia என்றுள்ளது. Stadia என்பது stadion என்ற வார்த்தையின் பன்மைச் சொல்லாக உள்ளது, இது சுமார் 607 அடிகள் கொண்ட ஒரு ரோம அளவையாகும். [19]"இவர் யார்" என்ற பாடத்தில் கலிலேயாக் கடல் பற்றிய கலந்துரையாடலை வாசிக்கவும். [20]அவர்கள் "இருட்டாயிருந்த" போது, "சாயங்காலத்தின்" ஏதோ ஒரு வேளையில் புறப்பட்டிருந்தார்கள் (யோவா. 6:16, 17ஐக் காணவும்), ஆனால் "நாலாம் ஜாமம்" வரைக்கும் இயேசு அவர்களிடத்தில் வரவில்லை (மத். 14:25; மாற். 6:48), இது அதிகாலை 3:00 முதல் 6:00 மணி வரையான வேளையாகும்.*

*[21]இயேசு புயலை அனுப்பியிருந்ததில்லை, ஆனால் வாழ்வில் ஏற்படும்*

ஒவ்வொரு இடர்ப்பாடும் அவரில் நாம் கொண்டுள்ள விசுவாசத்தைச் சோதிக்கிறது. [22]“இவர் யார்?” என்ற பாடத்தைப் படிக்கவும். [23]மாற்கு சுவிசேஷ விவரம், “அவர்களைக் கடந்துபோகிறவர்போல் காணப்பட்டார்” என்று கூறுகிறது (மாற். 6:48). அவர்களைப் பயமுறுத்துவதைத் தவிர்ப்பதற்காக அவர் “அவர்களைக் கடந்து செல்ல நோக்கம் கொண்டார்” என்று சிலர் ருத்துத் தெரிவித்துள்ளார்கள், ஒருவேளை அவ்வாறு இருந்திருக்கலாம். ஆயினும் மற்ற சுவிசேஷ விவரங்கள், இயேசு “அவர்களிடத்தில் போனார்” என்பதைச் சுட்டிக் காண்பிக்கின்றன (மத். 14:25; யோவா. 6:19). மாற்கு 6ல், “கடந்து போகிறவர்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது, “உடன் செல்லுகிறவர்” என்றும் மொழிபெயர்க்கப்படக் கூடும், அதுவே இவ்விடத்தில் சாத்தியமான அர்த்தமாக இருக்கிறது. [24]அவரை ஒரு ஆவேசம் என்று அவர்கள் நினைத்தது ஏன் என்பது நமக்குக் கூறப்படவில்லை; ஆனால் அந்த நாட்களில் மனிதர்களின் இருதயங்களில் மூடநம்பிக்கை ஆட்சி செலுத்திற்று என்பதை நினைவில் வையுங்கள். [25]இந்த நிகழ்ச்சிகள் “உடனடியாக” நடைபெற்றன என்ற கருத்தானது யோவான் 6:21ல் தெரிவிக்கப்படுகிறது. [26]சில வேளைகளில் கலிலேயாக்கடல், “கெனேசரேத் கடல்” என்று அழைக்கப் பட்டது (லூக். 5:1), ஏனென்றால் அப்பகுதியானது அங்கிருந்து பார்வைக்கெட்டும் தூரத்தில் இருந்தது. [27]மக்கள் இயேசுவின் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டது பற்றி “நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா” என்ற பாடத்தில் காணவும். [28]படகுகள் மேற்குக் கரையில் இருந்த திபேரியாவிலிருந்து வந்தன. படகோட்டிகள் கூட்டத்தைக் கண்டு, அவர்கள் செல்ல விரும்பும் இடத்திற்கு அவர்களை அழைத்துச் செல்வதன் மூலம் பணம் சம்பாதிக்கலாம் என்ற நம்பிக்கையில் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்திருக்கலாம். இதற்கு முன்பு அந்தக் கூட்டத்தில் இருந்தவர்கள் கப்பர்நகூமிலிருந்து கால்நடையாக நடந்து சென்றிருந்தார்கள், ஆனால் கப்பர்நகூமுக்குப் படகில் திரும்பிச் செல்லுவது என்பது பயணிக்க மிகவும் சுலபமான வழியாக இருந்திருக்கலாம். [29]இந்த மாபெரும் பிரசங்கத்தை வசனத்திற்கு வசனம் விளக்கிக் கூறுதலை இங்குள்ள வரையறைக்குட்பட்ட இடமானது தடை செய்கிறது. இயேசு மற்றும் அவரைக் கேள்வி கேட்டவர்கள் ஆகியோருக்கிடையில் நடைபெற்ற உரையாடலின் எளிமைப்படுத்தப்பட்ட விவரத்தைத் தருதல் அவசியமானதாக உள்ளது. [30]இந்தப் பாடத்தின் முற்பகுதியில் யோவான் 6:14க்கான குறிப்புகளை மறுகண்ணோட்டமிடவும்.

[31]இதை யோவான் 4:15ல் சமாரியப் பெண்ணின் வேண்டுகோளுடன் ஒப்பிடவும். யோவான் 4ல் அந்தப் பெண்ணுடனான இயேசுவின் கலந்துரையாடலுக்கும் யோவான் 6ல் அவரது பிரசங்கத்துக்கும் இடையில் பல இணைவுகள் உள்ளன. யோவான் 4ல் கிறிஸ்து தண்ணீர் என்ற உருவகத்தைப் பயன்படுத்தினார், ஏனென்றால் அந்தப் பெண்ணின் சிந்தையில் தண்ணீர் என்ற கருத்து அப்போது இருந்தது, மற்றும் அவர் யோவான் 6ல் அப்பம் என்ற உருவகத்தைப் பயன்படுத்தினார், ஏனென்றால் உணவு என்பதே அந்தக் கூட்டத்தாரின் அக்கறையாக/கவலையாக இருந்தது. பிரதான கருத்து இன்னமும் ஒரே மாதிரியானதாகவே உள்ளது. ஆயினும், யோவான் 4ன் கலந்துரையாடல், ஏற்றுக்கொள்ளுதலை விளைவித்தது, யோவான் 6ன் கலந்துரையாடல் புறக்கணித்ததில் முடிந்தது. [32]வசனம் 48 மற்றும் 51 ஆகியவற்றையும் காணவும். “நானே” என்னும் மற்ற கூற்றுக்கள் உள்ள வசனங்கள் பின்வருமாறு: 8:12, 58; 10:11; 11:25; 14:6; மற்றும் 15:1. [33]இயேசு தம்மீது விசுவாசம் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தக் கூடுதலான வார்த்தைகளைப் பயன்படுத்தினார் (யோவா. 6:40, 47ஐக் காணவும்); ஆனால், ஏற்கனவே கூறப்பட்டபடி, ஒவ்வொரு வசனத்தையும் ஆராய இங்குள்ள

[வரையறைக்குட்பட்ட] இடம் அனுமதிப்பதில்லை. [34]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 385. [35]David Smith, *The Days of His Flesh*: *The Earthly Life of Our Lord and Saviour Jesus Christ*, 8th ed. (London: Hodder and Stoughton, 1910), 241 (emphasis his); quoted in Robert Duncan Culver, *The Life of Christ* (Grand Rapids, Mich.: Baker Book House, 1976), 147n. [36]*இது கத்தோலிக்கர்களின் திருப்பலியை நியாயப்படுத்துவதற்கு அவர்களால் பயன்படுத்தப்படுகிற வசனப்பகுதிகளில் ஒன்றாக உள்ளது, அந்தத் திருப்பலியின் போது அப்பமும் திராட்ச இரசமும் இயேசுவின் உடலாகவும் இரத்தமாகவும் நேரடியாகவே மாறுகின்றன என்று அவர்கள் உரிமைகோருகின்றார்கள். ஆயினும், கர்த்தருடைய பந்தியை கிறிஸ்து ஏற்படுத்தியபோது, அது ஒரு நினைவுகூரும் பண்டிகையாக/ஆசரிப்பாக இருந்தது என்பதை அவர் தெளிவாக்கினார் (லூக். 22:19; 1 கொரி. 11:24, 25). இது நமது பாடத் தொடரில் பிற்பாடு, கர்த்தருடைய பந்தியைப் பற்றி நாம் படிக்கும்போது கலந்துரையாடப்படும் (மத். 26:26-29; மாற். 14:22-25; லூக். 22:19, 20; 1 கொரி. 11:23-26).* [37]*ஏசாயா 54:13; எரேமியா 31:33, 34 ஆகியவற்றை வாசிக்கவும்.* [38]Johnny Ramsey, "Eat My Flesh; Drink My Blood," *Gospel Minutes* (27 July 1979): 3. [39]*யோவானின் சுவிசேஷ விவரத்தில் இந்த இடத்தில் இருந்து, அவர் "சீஷன்" என்ற வார்த்தையை "உண்மையான சீஷன்" என்ற அர்த்தத்தில் மாத்திரம் பயன்படுத்தினார்.* [40]*முடிவு வரைக்கும் அப்போஸ்தலர்கள் யூதாஸின் அவிசுவாசத்தைப் பற்றி அறிந்திருக்கவில்லை (யோவா. 13:21, 22ஐக் காணவும்).*

[41]*யூதாஸ் ஏதோ ஒரு வகையில் ஒரு புதிராகவே இருக்கின்றான். சிலர் அவனை (''அவன் தொடக்கத்திலிருந்தே பிசாசாக இருந்தான்'' என்று கூறி) மிகவும் இருட்டாகச் சித்தரிக்கின்றார்கள், மற்றவர்களோ கர்த்தரை விற்றுப் போட்ட அவனது பொல்லாத நடக்கையென்ற குற்றத்திலிருந்து அவனை விடுவிக்கின்றார்கள். யூதாஸ் பற்றி (அவன் என்ன செய்தான் மற்றும் அவன் ஏன் அதைச் செய்தான் என்பவை பற்றி) இந்தப் பாடத் தொடரில் பிற்பகுதியில் காணப்படும்.* [42]*பணம் பற்றிய சிந்தை யூதாஸின் இருதயத்தில் முந்தி இடம் பெற்றிருந்தது (யோவா. 12:6).* [43]*ஜீவ அப்பம். இதைப் பற்றிய குறிப்புகளை, தொடர்ந்து வரும் ''மக்களுக்கு உண்மையிலேயே உதவி தேவைப்படும்போது" என்ற பிரசங்கத்தில் படிக்கவும்.*

## *ஜீவ அப்பம் (யோவான் 6:27-58)*

| ***மன்னா*** | ***ஜீவ அப்பம்*** |
|---|---|
| *தேவனிடமிருந்து வந்தது (வ. 31, 32)* | *தேவனிடமிருந்து வந்தவர் (வ. 32, 58)* |
| *அழியக்கூடியது (வ. 27)* | *நிலைத்திருப்பவர் (வ. 27)* |
| *சரீரப்பிரகாரமானது (அப்பம்)* | *ஆவிக்குரியவர் (இயேசு; வ. 35, 48, 51)* |
| *உண்டவர்களுக்கு மீண்டும் பசி ஏற்பட்டது (மறைமுகமாய் உணர்த்தப்பட்டது)* | *உண்பவர்கள் திருப்தி அடைகின்றார்கள் (வ. 35)* |
| *உண்டவர்கள் கடைசியில் மரித்தார்கள் (வ. 49, 58)* | *உண்பவர்கள் பிழைப்பார்கள் (வ. 33, 40, 47, 50, 51, 58)* |
| *உண்டதினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது (வ. 31)* | *விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றார் (வ. 29, 35, 36, 40, 47)* |